செய்தி வெளியீடு எண்: 704

<u>செய்தி வெளியீடு–10.10.2009</u>

## டாமின் நிறுவனத்தின் 'சி' 'டி' பிரிவு பணியாளர்கள் 1497 பேருக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகையாக ஒரு கோடியே 26 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது!

### முதலமைச்சர் கலைஞர் ஆணை!

டாமின் நிறுவனப் பணியாளர்களுக்கு 2006–2007, 2007–2008 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்டதுபோலவே டாமின் நிறுவனத்தின்கீழ் தற்போது பணிபுரியும் 'சி' மற்றும் 'டி' பிரிவுகளைச் சேர்ந்த 1497 பணியாளர்களுக்கு, போனஸ் சட்டத்தின்படி 10 ஆயிரம் ரூபாய் என்ற சம்பள உச்ச வரம்பிற்கு விலக்களித்து 2008–2009ஆம் ஆண்டிற்கு 8.33 சதவீத போனஸ் மற்றும் 11.67 கருணைத் தொகை சேர்த்து மொத்தம் 20 சதவீத போனஸ் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின்படி, 1497 பணியாளர்களுக்கு ஒரு கோடியே 26 இலட்சம் ரூபாய் போனஸாக வழங்கப்படும்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.